**தலைப்பு 209 – தேசிய சுவடிகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு - 209 தேசிய சுவடிகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 26 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 286.22 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 134.20 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 152.01 மில்லியன் அதாவது 53.11 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 109.82 | 98.66 | 11.16 | 10.12 |
| மூலதன | 176.40 | 35.54 | 140.86 | 79.85 |
| மொத்தம் | 286.22 | 134.20 | 152.02 | **53.11** |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 20901 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 5.60 | 3.15 | 3.00 | 3.37 | 26.00 | 13.38 |

**2.3 பொதுவைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 1.02 மில்லியன் ஆக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

தேசிய சுவடிகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

விடய இலக்க 20901 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 343,339 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகள் 02 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

**3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.2.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2015 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், புதிய கட்டிடத்திற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 130 மில்லியன்

நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அக் கொள்வனவுகளுக்குரிய கொள்வனவுச் செயற்பாடுகள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகினாலும் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2012 நவம்பர் மாதத்தின் போது திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்காக ரூபா 638 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அது திறந்து வைத்து 3 வருடங்களைக் கடந்திருந்த போதிலும் கட்டிடத்திற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் அசைவுறக்கூடிய இராக்கை (Mobile Racking System) வழங்கப்படாமையினால் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கட்டிடம் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 3.4 செயலாற்றல்

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களம் பிரதான பணிகளை போதியளவில் நிறைவேற்றாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) திணைக்களத்தை மேற்தரப்படுத்தல்**

தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சினால் 2013 செப்தெம்பர் 19 ஆந் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனத்திற்கு கிடைத்த சிபாரிசின் அடிப்படையில் தேசிய சுவடிகள் திணைக்களத்தை மேற்தரப்படுத்தும் நிறுவனக் கட்டமைப்பு, பதவிகள் மற்றும் ஊழியர் எண்ணிக்கையின் தேவைகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2016 யூன் மாதம் வரையிலும் உரிய மேற்தரப்படுத்தல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அசைவுறக்கூடிய இராக்கைகளின் கொள்வனவு (MOBILE RACKING SYSTEM)**

புதிய கட்டிட வளாகத்தில் பல்வேறு பிரிவுகளுக்காக 285 தளபாட உபகரண விடயங்கள், 185 கணனி விடயங்கள் மற்றும் அசைவுறக் கூடிய இராக்கைகளைக் கொள்வனவு செய்வதற்கான மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது. உரிய ஆலோசனைச் சேவைக் கட்டணத்தில் 50 சதவீதமான ரூபா 12.5 மில்லியன் 2014 யூலை 04 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், 2015 ஆம் ஆண்டிற்காக அசைவுறக் கூடிய இராக்கைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 130 மில்லியன் நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) மிகமுக்கிய ஆவணங்களைப் பாதுகாத்தலும் நுண்பாக முறையில் படம் எடுத்தலும்**

மீளாய்வாண்டின் போது பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட மிக முக்கிய ஆவணங்களின் எண்ணிக்கை 36 ஆக இருந்த போதிலும், 13 ஆவணங்கள் மாத்திரம் பாதுகாக்கப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டின் போது நுண்பாக முறையில் படம் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வெளிப்படுத்தப்பட்ட எண்ணிக்கை 155,000 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது 133,483 மாத்திரமே நுண்பாக முறையில் புகைப்படம் எடுக்கப்பட்டிருந்தது.

**3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

**செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமை**

மீளாய்வாண்டின்போது அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|
| | ரூபா | |
| திரைப்படங்களை டிஜிடல் மயப்படுத்தல் | 6,000,000 | பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை |
| ஓவியங்களை டிஜீட்டல் மயப்படுத்தலும் பகிரங்கப்படுத்தும் | 2,500,000 | பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை |
| மொத்தம் | 8,500,000 | |

**3.6 வங்கிக் கணக்கு**

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

திணைக்களத்தால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 823,057 கூட்டுத்தொகையான வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான 04 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

புதிதாக ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட இரத்தினபுரி கிளை அலுவலகத்திற்கு தேவையான இரும்பு இராக்கைகளைக் கொள்வனவு செய்வதற்காக 2015 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 2.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் மாதம் வரையிலும் அதற்குப் பொருத்தமான கட்டிடமொன்று வழங்கப்பட்டிருக்க வில்லை.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 02 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 41 | 09 | 32 |
| (iii) | இரண்டாம் நிலை | 133 | 53 | 80 |
| (iv) | ஆரம்ப நிலை | 74 | 55 | 19 |
| | மொத்தம் | 254 | 119 | 135 |

**(ஆ) பதவியணியினரின் பற்றாக்குறையின் அடிப்படையில் செயலாற்றல் வீழ்ச்சியடையந்தமை**

07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அதிகரித்துக் கொண்டுவருகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் காரணமாக திணைக்களத்தின் செயலாற்றல் கீழ் மட்டத்தில் காணப்பட்டமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மிக முக்கியஆவணங்களைப் பேணுதல்**

2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பாதுகாக்கப்பட வேண்டிய மிக முக்கிய ஆவணங்களின் எண்ணிக்கையில் 16 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையிலான வீச்சில் பேணப்பட்டிருந்தது.

**(ii) பேணப்பட வேண்டிய ஆவணங்களின் அளவு**

திணைக்களத்தின் 5 ஆவணக் காப்பகங்கள் மற்றும் இரகசிய ஆவணப் பிரிவிற்குச் சொந்தமான பாதுகாக்கப்பட வேண்டிய கடதாசி ஆவணங்களின் பக்க எண்ணிக்கை 2016 மார்ச் மாதம் வரையில் 79,372,200 ஆக இருந்தது. இறுவெட்டுக்கள், வர்ண மட்டைகள் (Sides) திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சிப் படங்களை உள்ளடக்கிய ஆவணக் காப்பகங்களில் வைக்கப்பட்ட கட்புல செவிப்புல ஆவணங்களின் எண்ணிக்கை 13,957 உம், 281,910 நிழற்பிரதிகளும் காணப்பட்டன. திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் இறுதியளவில் 254 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 119 ஆக இருந்தது. வெற்றிடங்களின் சதவீதம் 52 ஆகக் காணப்பட்டபோதும் மேற்கூறப்பட்ட ஆவணங்களின் பாதுகாப்பு மற்றும் பேணுதல் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.